IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# AVOIDING MEAN ASSOCIATIONS IN THE SOCIO POLITICAL BACKGROUND OF THIRUKKURAL

# சமூக அரசியல் பின்புலத்தில் திருக்குறள் கட்டமைக்கும் சிற்றினம் சேராமை

Saravanajothi Seetharaman[1]

சரவணஜோதி சீத்தாராமன்

[1] Assistant Professor, Thiagarajar College, Madurai,Tamilnadu, India.

***Abstract…The Purpose of the study*:** Aim of the study is to identify the Avoiding mean associations in the socio political background of Thirukkural. ***Methodology*:** This study based on qualitative method and the Descriptive approach has been used. ***Main Findings*:** Thirukkural is the signified ethic literature in Tamil. In this research, the etymology of race as stated in Thirukkural . Post-thinai society it has been pointed out by the Uraiaasiriyar that the concept of ethical morality has been taught through Race. In this research, constructing of Avoiding mean associations analysed. This research try to identify the relationships between materialism and social dialectics in this Virtue. In this article, it is stated that the concept of race and morality. The man who thinking worst is called Avoiding mean associations. in Thirukkural, when the powers of Not Killing, Not Drinking Palm Wine, The Absence of Fraud, Ignorance, etc., are to be interpreted as the fact that the Uraiaasiriyar explained that the people who have these characters are called Avoiding mean associations. Therefore, the meaning of the word 'race' in Thirukkural has been thoroughly explored. In this article, it is pointed out that the authority of eroticism on the basis of material intelligence is not moralistic. In this research, meaning of the word race is explained detailed. As a result of this approach, the concept of morality is interpreted in terms of race in Thirukkural. Researcher revealed that the word Race is used for the characteristics. ***Application of this study*:** To find the domination of the concept of morality is interpreted in terms of race in Thirukkural. ***Originality of study*:** The analyst confirms that in this research, meaning of the word race is explained detailed.

***Keywords…*** *Thirukkural, the Avoiding mean associations, Not Drinking Palm Wine, The Absence of Fraud, Ethics, Uraiaasiriyar.*

***ஆய்வுச்சாரம்-*** இவ்வாய்வின் முதன்மை நோக்கம் சமூக அரசியல் பின்புலத்தில் திருக்குறள் கட்டமைக்கும் சிற்றினம் சேராமை குறித்து ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் விளக்கமுறை அணுகுமுறை கையளாப்பட்டுள்ளது. அற இலக்கியங்களில் முதன்மையானதாகக் கருதப்படுவது திருக்குறளாகும். இவ்வாய்வில், திருக்குறளில் கூறப்பட்டுள்ள இனம் என்ற சொற்பயன்பாட்டியல் குறித்து விரிவாக ஆராயப்படுகிறது. திணைச் சமூகத்திற்குப் பின் ஒழுக்க நெறிகள் சார்ந்த கருத்தியல், இனம் என்ற சொல்லாடலில் கையாளப்பட்டுள்ளதாக உரையாசிரியர்களால் எடுத்துரைக்கப்படுகிறது. திருக்குறளில் சிற்றினம் சேராமை அதிகாரம் கட்டமைக்கும் பொருள் புலப்பாட்டினைக் கண்டறியப்படுகிறது. வள்ளுவர் கட்டமைக்கும் பொருள் புலப்பாட்டிற்கும் சமூக இயங்கியல் அரசியலுக்கும் உள்ள உறவுகள் கண்டறிந்து கூறுவது இவாய்வின் முயற்சியாக உள்ளது. வள்ளுவரின் அதிகாரங்களில், குடிமை, குடி செயல்வகை என்ற இரண்டு அதிகாரங்கள் கட்டமைக்கும் கருத்தும் இனம் என்ற கருத்தியலும் ஒன்றுடன் ஒன்றும் உறவுடையாதாக இருப்பதைக் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது. சமூகம் கட்டமைத்த ஒழுக்க கூறுகளின் அடிப்படையில் தீய செயல்களில் ஈடுபடுபவர்களின் உறவுகள் பகுத்து ஆராயப்படிகின்றன. சிற்றினம் என்பது ‘சிறிய அறிவுடையவன்’, என்ற கருத்து உரையாசிரியர்களால் முவைக்கப்படுகின்றன. திருக்குறளில், கொல்லமை, பொய் சொல்லாமை, கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, கள்ளாமை, என்ற அதிகாரங்கள் இருக்கும் போது, உரையாசிரிர்கள் சிற்றினம் சேராமை அதிகாரத்தைச் சிறிய ஒழுக்கம் உடையவர்கள் என்ற பொருண்மையில் எடுத்துரைப்பது ஆராயப்படவேண்டி இருக்கிறது. எனவே, திருக்குறளில் காணலாகும் இனம் என்ற சொல்லின் பொருள் முழுமையாக ஆராயப்பட்டுள்ளது. பொருள் புலபாட்டு அடிப்படையில் சிற்றினம் சேராமை அதிகாரம் ஒழுக்கம் சார்ந்த கருத்தியல் இல்லை என்பதைக் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது. இவ்வாய்வின் பயனாக, சிறினம் சேராமை என்பது இனம் (Race) என்ற அடிப்படையில் பொருள் கொள்ளப்பட்டு, வள்ளுவரின் கருத்தியல் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. சிற்றினம் என்ற அதிகாரம் கூறும் கருத்தியல் நிகழ்காலத்திற்கு மீளாய்வு செய்யவேண்டியதாக உள்ளது. சமூக உருவாக்கத்தில் சிற்றினம் சேராமை அதிகாரம் இனம் (Race) என்ற பொருளில் கட்டமைக்கப்படுகிறது என்பதினை ஆய்வாளர் உறுதிசெய்கின்றார்.

***கருச்சொற்கள்…*** *திருக்குறள், சிற்றினம் சேராமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, ஒழுக்கம், உரையாசிரியர்.*

***முன்னுரை***

உலகில் தோன்றிய உயிர்களில் மனிதன் தனித்தன்மையோடு விளங்குகிறான். ஏனெனில் இவ்வுலகம் மனிதனின் விழுமியப் பின்னணியில் கட்டமைக்கப்பட்ட ஒழுக்கத்தால் இயக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் விழுமியப் பண்பு என்பது இனம் (Race) என்ற கருத்தியல் சார்ந்து வகைப்படுத்தப்பட்டது. இவ்வரையறை மனிதனின் செயல்களை நிர்ணயிப்பதற்குத் தலைமைக் கருத்தாகக் காணப்பட்டது. கிரேக்க அறிஞர்கள் மனிதகுலத்தை இருபெரும் குழுக்களாக வகுத்தனர். கிரேக்கர்கள் நாகரிகம் அடைந்தோர், ஏனையோர் காட்டுமிராண்டிகள் என குறிப்பிட்டனர். இப்பாகுபாட்டின் அடிப்படையில் ஏனைய மக்களிடமும் உயர்குலத்தன்மை என்ற மனஉணர்வு வளரத் தொடங்கியது. மிகப் பெரும் பிரிவாக உருவாகிய இனம் என்னும் சொல் பலவாறாகப் பல்வேறு சூழலில் பொருள் கொள்ளப்பட்டுக் கூறப்படுகிறது.

அரசியலார், மொழியியலார், உயிரியலார், வரலாற்றியலார், சமய அறிஞர்கள் முதலானோர் முற்காலம் தொட்டே வெவ்வேறு கருத்தினைக் கொண்டு தத்தம் வழக்கில் இச்சொல்லைக் கையாண்டுள்ளனர். சமுதாயவியல், அடிப்படையில் திருவள்ளுவர் குறிப்பிடும் இனம் என்னும் சொல் இவ்வாய்வுப் பொருளாக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் இக்கட்டுரையானது திருவள்ளுவரின் சிற்றினம் சேரான்மை அதிகாரத்தை கேள்விக்கு உள்ளாக்கி இனம் குறித்த கருத்துக்களைச் சமுதாயப் பின்னணியில் விளக்குகிறது.

இதைப் பின்தொடர்ந்து இனக்கொள்கை, இனப் படிநிலை போன்ற நிலைகளில் வள்ளுவரின் இன நம்பிக்கை ஆராயப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

தமிழ் இலக்கியங்களில் திருக்குறள் குறித்து பல்வேறு அறிஞர்களால் ஆராய்ந்து கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஒழுக்கக்கோட்பாடு என்பதை திருக்குறள் வைத்து மட்டும் பல்வேறு ஆய்வாளர்களால் எழுதப்பட்டுள்ளன. வ.சுப. மாணிக்கம் எழுதிய வள்ளுவம், என்ற நூல்கள் முக்கியமானவையாகும். சோமசுந்தர பாரதியார், தண்டபாணி தேசிகர் போன்ற இருபாதாம் நூற்றாண்டு உரையாசிரியர்கள் சிற்றினம் சேராமை அதிகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர். இதன் பின்னனியில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாய்வுக்கு முன்னோடியாக, க.ப. அறவாணன் (2006) எழுதியுள்ள திருவள்ளுவம் என்னும் நூலில் உள்ள திருவள்ளுவச் சமுதாயவியல் கட்டுரை அமைகிறது. இக்கட்டுரை சமுதாயவியல் உளவியலைப் பயன்படுத்தி உலகமக்களின் போக்கை ஆராய்ந்த கருத்தைக் குறிப்பிடுகிறது. அமெரிக்கர், பெல்ஜியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், செருமானியர், சப்பானியர் போன்ற சமுதாய அடையாளங்களைக் கொண்டு தனிமனிதனின் சமுதாய உளவியல் வெளிப்படும் தன்மையைக் கட்டுரையில் க.ப.அறவாணன் கூறியுள்ளார்.

வ.சுப. மாணிக்கம் (1993), எழுதிய *வள்ளுவம்* என்ற நூல் திருக்குறளில் காணப்படும் அற நெறிகள் மக்கள் வாழ்வியலோடு இணைந்து உள்ளன என்பதை விரிவாக ஆராய்கிறது. வள்ளுவத்தில் காணப்படும் வாழ்வியல் நெறிகள் உலக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதாக உள்ளன என்ற கருத்தியல் முவைக்கப்படுகிறது.

Saravanajothi seetharaman (2020), *Construction of Ethics in Cirupancamulam* என்ற கட்டுரையில், அற இலக்கியங்கல் ஒழுக்க மரபுப் பின்புலத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துறைக்கின்றது. சிறுபஞ்சமூலம் கட்டமைக்கும் ஒழுக்க மரபுகளுக்குப் பின்னல் சமயங்களின் அரசியலும் சமூக மதிப்புகளும் உந்து சக்தியாக உள்ளன என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. ஒழுக்கவியல் கூறுகள் உருவாக்கம் என்பது சமூக உற்பத்திமுறையின் அடிப்படைகளாக உள்ளன.

Saravanajothi seetharaman (2020), *Morality Thoughts and Social Awareness inVivekasinthamani* விவவகசிந்தாமனியில் ஒழுக்கவியல் சிந்தனையும் சமூக விழிப்புணர்வும் □□□□ □□□□□□□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□ □□□□ □□□□□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□□□□□□.

மக்களின் வாழ்க்கை முறை சிறப்புடன் அமைய ஒழுக்கம் இன்றியமையாது என்ற கருத்தினை முன்னோடி ஆய்வுகள் முன்வைக்கின்றன. ஒழுக்கவியல் கட்டமைப்பை அற இலக்கியங்கள் முன்னெடுக்கின்றன என்பதை உணரமுடிகின்றது. இவ்வகையில் திருக்குறள் அதிகாரங்கள் சமூக ஒழுக்கங்களை உற்பத்தி பன்னுவதில் முக்கியமானவையாக அமைகின்றன. இவ்வகையில் சிற்றினம் சேராமை அதிகாரம் கட்டமைக்கும் உரையாசிரியர்களின் கருத்து மீளாய்வு செய்யபட்டுள்ளது. சிற்றினம் என்பது சிறிய அறிவுடையவன் என்ற கருத்து மறுக்கப்பட்டு சிறிய குடிப்பிறப்பு என்பதாக வரையறை செய்யபட்டுள்ளது என்பதை இவ்வாய்வு முன்வைக்கிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்கு தேவையான நூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆய்வாளர் சமூக அரசியல் பின்புலத்தில் சிறுபஞமூலம் ஒழுக்கவியல் என்னும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளமையால் தரவுகள் சேகரிப்பதில் தெளிவு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே தரவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டு நிரல் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

## இன ஆராய்ச்சி

இரண்டாம் உலகப்போருக்குப் பின் இனக்குழுவின் இலக்கணம் என்ன என்பது குறித்து ஆய்வுகள் நிகழ்ந்தன. இனம் என்னும் சொல்லை முதன் முதலில் 1749இல் பப்பன் என்பவர் இயற்கை வரலாற்றியலில் கையாண்டார். இதனைப் பின்தொடர்ந்து உடல்சார் மானிடவியலாரான புழுமன் பேக் உடலின் புறக்கூறுகளாகிய நிறம், கை, கால், மூக்கு, உயரம், குள்ளம் என்பவை இனம் சார்ந்தமையும் என்று விளக்கம் கூறினார். ஆனால் டார்வினுடைய இயற்கைத் தேர்வுக் கோட்பாடு கூறிய, ஒவ்வொரு இனமும் தான் வாழும் சூழ்நிலையில் நிலையான பண்பு பெற்றிருக்க வில்லை, காலத்தின் நிகழ்விற்கேற்ப ஒவ்வொரு இனமும் தன் பண்புகளில் மாற்றம் பெறுகின்றது என்ற கருத்து திருவள்ளுவரின் இனவிளக்கத்திற்கு முரணாக அமைந்துள்ளது. வள்ளுவர் காலத்தில் இனத்திற்கான மதிப்பு பெரிதும் வலியுறுத்தப் பட்டது. இதனை,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தன்மை பூண்டொழுக லான (குறள் : 30)

என்ற குறளின் வாயிலாக வலியுறுத்துகிறார். அந்தணர் என்போர் மற்ற உயிர்களுக்குத் தீமை செய்யாதவர்கள். ஆகையால் அவர்கள் ஏனையோரை விட சிறந்த நிலையில் கருதப்பட வேண்டியவர்கள் என்ற கருத்து இக்குறளில் வலியுறுத்தப்படுகிறது. அப்படியானால் ஏனையோர் தீங்கு செய்யக்கூடியவர்கள், அறவோர் இல்லை என்ற கருத்து வலுப்பெறுகிறது. மடிசன் கிராண்டு என்பவர் ஐரோப்பிய வெள்ளை இனத்தவர் மிகச் சிறந்த அறிவினையும் பல உயர்ந்த குணங்களையும் கொண்டிருந்தனர். அதனால் அவர்களிடம் இருந்து நாகரிகம் உருவாகியது என்றார். இது போன்ற கருத்தையே வள்ளுவர் மேற்சுட்டப்பட்ட குறளில் கூறியுள்ளார். அறிவு என்பது சூழ்நிலையால் உருவாகிறது என்ற டார்வினின் சிந்தனைக்கு எதிரான கருத்து ஐரோப்பியரிடம் உருவாகியது.

சமூகத்தில் தம்முடன் உள்ள பிற சமூகத்தினரைக் காட்டிலும் குறைந்த தகுதி, அதிகாரம், மதிப்பு ஆகியவற்றைப் பெற்றுள்ள மக்கள் குழுவே இனச்சிறுபான்மையினர் என்ற கருத்து வலுப்பெற்றது. உலகத்தில் ஒவ்வொரு கண்டத்திலும், நாட்டிலும் நடைபெறும் படையெடுப்பு, ஆட்சியைக் கைப்பற்றல் போன்ற செயல்களால் மக்கள் இடம் பெயர்ந்து வாழ வேண்டிய நிர்பந்தம் உருவாகுகிறது. இதனடிப்படையில் இன்று இந்திய நாட்டில் கிறித்தவர், இஸ்லாமியர், யூதர், புத்த மதத்தினர், பாரசீகர், சௌராஸ்ட்டிரர் போன்ற இன மக்கள் சமயச் சிறுபான்மையினர், மொழிச் சிறுபான்மையினராகக் காணப்படுகின்றனர். இக்கட்டுரையில், திருவள்ளுவர் குறிப்பிடும் சிற்றினம் சேராமை என்ற அதிகாரம் சிறுபான்மை இனத்தைச் சுட்டுவதாகக் கூறப்பட்டுள்ளது. வள்ளுவர் காலத்தில் காணப்பட்ட சிறுபான்மை இனம் யார்? என்பதான ஆய்வு தனிப்பொருளுக்குரியது. இக்கருத்து இவ்வாய்வில் ஆராயப்படவில்லை.

## திருக்குறளில் இனம்

இனம் குறித்த ஆய்வுகளும், அறிக்கைகளும் யுனெஸ்கோ நிறுவனத்தின் மூலம் 1964ல் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை மனித சமூகத்தின் நிலைமைகளில் நிகழும் வர்க்கப் போராட்டம் விலங்குலகில் நிகழும் வர்க்கப் போராட்டத்திற்கு ஒப்பானது என்கிறது. இத்தகைய போராட்டம் நடப்புலகிலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகையால், இனம் என்பதற்கு இணையான பதம், நடப்புக் காலத்தில் எத்தனைச் சொற்களாக உருவெடுத்துள்ளன் அவை வள்ளுவரிடம் என்னென்ன பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதைக் காண வேண்டும். அவற்றில், குடி, குலம், பிறப்பு, உயர்வு, தாழ்வு என்பவற்றிற்கான உறவு ஆராயப்படும் பொழுது அவற்றில் குடி, குலம் என்பவை தலைமுறை, பாரம்பரியம் என்று குடும்பத்தை மையமிட்ட பொருளில் உருவமைக்கப்பட்டிருக்கின்றன.

சான்றாக,

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்

நல்லாள் இலாத குடி (குறள் : 1030)

என்ற குறளில், துன்பத்தின் விளிம்பில் இருக்கும் குடும்பத்தை நிலை நிறுத்த, நல்ல மாந்தர் அக்குடும்பத்தில் இல்லாவிட்டால் அக்குடும்பம் அழியும் என்பது பொருள். இங்கு குடி என்னும் சொல், குடும்பம் என்ற பொருளில் இடம் பெறுகிறது. இச்சொற்களை மையமிட்டே வள்ளுவர், குடிமை, குடிச்செயல் வகை ஆகிய இரண்டு அதிகாரங்களை அமைத்துள்ளார். இவ்விரண்டு அதிகாரங்களிலும் பாரம்பரியம் மிக்க குடும்பத்தின் பண்பு அமைய வேண்டிய திறத்தை விளக்குகிறார்.

வள்ளுவர் காட்டும் சிற்றினம் என்ற பதத்திற்கு உரையாசிரியர் தரும் விளக்கம் சிறிய அறிவுடையவர் என்பதாகும். சிறிய அறிவு என்பதற்கு விளக்கம் தரும் மணக்குடவர், கள்ளுண்ணாமை, கூடா நட்பு, புலால் மறுத்தல், புறங்கூறாமை, பிறனில் விழையாமை போன்ற ஒழுக்க அறிவு உடையவர் என்கிறார். "இவை எல்லாம் தனித்தனி அதிகாரங்களாக இருக்கும் பொழுது சிற்றினம் சேராமை என்ற அதிகாரம் அமைக்க வேண்டிய அவசியம் என்ன? மற்றும் சிற்றினம் அஞ்சும் என்று முதற்குறளிலும், நல்லினத்தின் ஊங்கும் என்று இறுதிக் குறளிலும் கூறியவற்றைக் கொண்டு இவை சமூகத்தைக் குறிப்பதாகத் தான் பொருள் கொள்ள முடியும்" என்று தண்டபாணிதேசிகர் திருக்குறள் உரைவளத்தில் எடுத்துரைக்கிறார். இவ்வாறு இருக்க சிற்றினம் சேராமை அதிகாரம், சிறுபான்மை இனத்தைக் குறிக்கிறது எனலாம். வெகுளாமை அதிகாரத்தில் வள்ளுவர்,

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்

ஏமப் புணையைச் சுடும் (குறள்:306)

என்கிறார் இக்குறள் சங்ககாலத்திற்குப் பின் தோன்றியது. அக்காலம் ஒரு போர்க்காலச் சமூகமாக இருந்தது. மன்னனே உயிர்த்தே மலர்தலை உலகம் என்பது மக்கள் வாழ்க்கை. ஒரு மன்னனின் கோபம் அவன் சார்ந்த சமூகத்தை அழிக்கும். இதன் பின்னணியில் இக்குறளைப் பொருள் கொண்டால், இனம் என்பதை வள்ளுவர் எத்தகையப் பயன்தளத்தில் குறிப்பிடுகிறார் என்பதை உணரலாம்.

வள்ளுவர் பிறப்பால் உயர்வு, தாழ்வு உண்டு என்பதையும் அதனை நிவர்த்திச் செய்யும் காரணி என்ன என்பதையும் குறிப்பிடுகிறார்.

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்

கற்றார் அனைத்திலர் பாடு (குறள் : 409)

என்பதன் வாயிலாக, கல்வி என்பது இடஒதுக்கீட்டு அடிப்படையில் சபை ஏறுவதற்கு அனுமதிக்கப்படும் என்ற கருத்து முன்வைக்கபடுகிறது.

நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு

இனத்தியல்பது ஆகும் அறிவு (குறள்:452)

என்ற குறளில் நீரின் தன்மை நிலத்தால் மாறுபடுவது போல இனத்தின் தன்மைக்கேற்ப அறிவு மாறுபடும் என்கிறார். இதன் மூலம், கல்வி என்ற இடஒதுக்கீட்டால் ஏற்றுக்கொள்ளப்படும் மனிதன், அவன் இனத்தால் செயல் இழந்த பொம்மை ஆவான் என்பதனை உணர முடிகிறது.

சமூகச் சமநிலை இன்மையால் உருவாகிய இனக் கொள்கையை, வள்ளுவர் மறுமை உலகத்திற்கும் கொண்டு செல்கிறார்.

மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்

இனநலத்தின் ஏமாப்பு உடைத்து (குறள்:459)

இக்குறள் வழியாக மாந்தர் மனதில் தீ வைப்பது போல் இனம் என்பது மறுமை உலகை அடைவதற்கும் ஒரு அங்கமாக அமைகிறது என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறாக வள்ளுவர் காலத்தில் காணப்பட்ட இனம் மீதான உணர்வு சமூகத்தை ஆட்சி செய்தது என்பதை அறிய முடிகிறது.

### *சிற்றினம் சேராமை அதிகாரம் கட்டமைகும் பொருண்மைகள்*

பெரியவர்கள் தமனக்கு இனமான கூட்டத்துடன் சேர்வார்கள். தனக்கு இனம் இல்லாத சிறியவர்கள் கண்டால் விலகிச்செல்வார்கள். எவ்வாறு என்றால் நீர் மண்ணின் தன்மைக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்வது போல மனிதர்களுடைய அறிவு என்பதும் தன் இனத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்வார்கள் என்ற கருத்து முன்வைக்கப் படுகிறது. அறிவியல் முறைப்படி மனிதனின் புலன் உணர்வு அவரவர் மனம் சார்ந்தததது. ஆனால் மனிதனின் சிறப்பு குணம் என்பது அவரவர் சேர்க்கையால் வருவதாகும். இத்தகையச் சிறப்பின் காரணமாக வரும் அறிவு மனத்துள்ளதாக இருந்தாலும் இனத்தின் காரணமாகத்தான் கருதப்படும். மனிதர்களின் மனத்தூய்மையும் வினைத்தூய்மையும் அவன் சார்ந்த இனத்தூய்மையால் வரும். மனநலம் ஆக்கம் தரும் தான் சார்ந்த இனநலம் எல்லா ஆக்கமும் தரும். எனவே, சிற்றினம் என்பது மனம் சார்ந்த அறிவை அடிப்படையாகக் கொண்டது என்ற கருத்து திட்டவட்டமாக இவ்வியலில் வரையறை செய்யப்படுகிறது. மனம் சார்ந்த அறிவு என்பது இனத்தால் உருவாக்கப்படுகிறது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இங்கு இனம் என்பது ஒழுக்கத்தால் சேர்ந்த கூட்டம் என்றுவதற்கு தெளிவான சான்றுகள் ஏதுமில்லை. குழுக்களின் பின்புலத்தில் இனம் என்ற சொல் வரையறை செய்யப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

### *முடிவுரை*

இன ஆராய்ச்சியாளர் தம் ஆய்வு மூலம் இனத்தின் தன்மை சூழ்நிலையால் மாறுபடும். இவை சமுதாயத்தை ஆட்சி செய்ய வேண்டிய அவசியமில்லை என்றனர். இருப்பினும் குறிப்பிட்டக் காலக்கட்டத்தில் இன ஆதிக்கம் அதிகாரத்தால் வலிமை பெற்றிருந்தது என்பதையும், அதற்காக யுனெஸ்கோ போன்ற நிறுவனங்கள் அதனை நிவர்த்திச் செய்ய முற்பட்டன என்பதையும் அறிய முடிகிறது. மேலும் வள்ளுவர் அமைத்த சிற்றினம் சேராமை ஒழுக்க நியதியால் அமையவில்லை இனம் குறித்த சமுதாயச் சிந்தனையை முன் வைக்கிறது. ஆயினும், வள்ளுவர் காலத்தில் காணப்பட்ட இன உணர்வுக்கு வள்ளுவர் கைகொடுத்தார் என்று இவ்வாய்வு கூறவில்லை. முற்காலத்தில் காணப்பட்ட இனக்கருத்தியலை வள்ளுவர் வெளிப்படுத்துகிறார் என்று கூறலாம். நடப்புக் காலத்தில் பரந்தகண் கொண்டு பார்க்கும் போது நமக்கு இன ஆதிக்கம் இல்லை என்று தோன்றினாலும், சில விசமத்தனங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

## REFERENCE

[1] Aravanan., Ka., Pa., (2006), ***Thiruvalluvam,*** Chennai: Tamilkottam.

[2] Dhandapanithesigar., S. (1950), ***Thirukkural,*** Tharumapura

athinam,www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0012344_திருக்குறள்_உரைவளம்.pdf

[3] Govinthan., pulaver. ka., (1909), ***Thamilar thorramum paravalum,*** Chennai: Saivasithantha nurpathippu kalagam, http://www.tamilvu.org/library/nationalized/pdf/17-kagovindan/tamalarthotharamparavalum.pdf

[4] Manikam., Va., suba., (1993), ***Valluvam,*** Chennai: Manivasakar pathipagam. http://www.tamilvu.org/library/nationalized/pdf/65-va.suba.manikkam/valuvam.pdf

[5] Pope., G., U., ***Thirukkural,*** *http://www.tamilvu.org/library/l2100/html/l2104vur.htm*

[6] Saravanajothi, S. (2020), ***Construction of Ethics in Cirupancamulam,*** International Journal of Research and Analytical Reviews(IJRAR), Volume 7, Issues 2., www.ijrar.org.

[7] Saravanajothi seetharaman (2020), ***Morality Thoughts and Social Awareness inVivekasinthamani***, Journal of Emerging Technologies and Innovative Research (JETIR) www.jetir.org

[8] Thamizannal, (2009). ***History of Tamil Literature***, Madurai: Sinthamanipthippagam.